# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான
# இலகுவழி மாதிரிப் பரீட்சை - 42

**ஆசிரியர் : P.அம்பிகைபாகன்**

**வினாத்தாள் - 2**

**1 மணி 15 நிமிடங்கள்**

**(அரச பரீட்சையைத் தழுவிய மாதிரிப் பரீட்சை)**

**பின்வரும் பந்தியை நன்றாக வாசிக்குக.**

இலங்கை இயற்கை வளங்கொழிக்கும் செழிய நாடு. இலங்கையில் இயற்கைக் கூறுகள் மலைகளாகவம், காடுகளாகவும், வயல்களாகவும், கடல்களாகவும், ஆறுகளாகவும், குளங்களாகவும் பிரிந்தும் தொடர்ந்தும் வளம் செய்கின்றன. இலங்கை நாற்புறமும் நீலக்கடலால் சூழப்பட்ட அழகான தீவு. நாற்புறக் கடலும் அலைகளாக எழுந்து இலங்கையை ஆசீர்வதிக்கின்றன. மலையகம் பச்சைக் கம்பளத்தால் போர்த்தது போல் தேயிலைச் செடிகளால் செழித்தோங்கிக் காணப்படுகின்றன.

**கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளைப் பந்தியிலிருந்தது தெரிந்து புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**

01. இலங்கைத் தீவில் காணப்படும் கூறுகள் எவை?

...........................................................................................................................

02. “செயற்கை” என்ற சொல்லின் எதிர்க்கருத்துச் சொல்லை எழுதுக.

...........................................................................................................................

03. ‘வாழ்த்துகின்றன’ என்ற சொல்லின் ஒத்தகருத்துச் சொல்லை எழுதுக.

...........................................................................................................................

04. இங்கு இடம்பெறும் உவமானத்தை எழுதுக.

...........................................................................................................................

05. பெருந்தோட்டப் பயிர் ஒன்று எழுதுக.

...........................................................................................................................

06. கடலுக்கு கூறும் அடைமொழிகள் இரண்டையும் எழுதுக.

...........................................................................................................................

07. ‘காணப்படுகின்றன’ என்னும் சொல்லின் திணை, பால், எண், இடத்தை எழுதுக.

...........................................................................................................................

08. ‘எமது நாடு இலங்கை’ எனும் வாக்கியத்தில் எமது என்ற சொல்லின் திணை, பால், எண், இடத்தை எழுதுக.

...........................................................................................................................

09. கீழே தரப்பட்டுள்ளவற்றிற்கு அடைப்புக்குள் இருந்து பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **வந்தேன்** | **கதிரை** | **மலைகள்** | **வந்தோம்** | **சிறுவர்கள்** | **சிறுமி** |

1) உயர்திணை, பன்மை, படர்க்கைப் பெயர்ச்சொல் ( ........................................ )
2) அ∴றிணை, ஒருமை, படர்க்கைப் பெயர்ச்சொல் ( ........................................ )
3) தன்மை, பன்மை, வினைச்சொல் ( ........................................ )

10. பின்வரும் தொடர்களுக்குரிய தனிச் சொல்லை எழுதுக.

1) மூன்று புறமும் கடலால் சூழப்பட்ட நிலம். ( ........................................ )
2) ஆகாய விமானத்தை செலுத்துபவன். ( ........................................ )
3) யானையைப் பழக்கி வழி நடத்துபவன். ( ........................................ )

11. பின்வரும் ஆங்கில வாக்கியங்களின் கருத்தைத் தமிழில் எழுதுக.

1) MAY I GO HOME ..............................................................................................

2) YOU WILL COME TOMORROW ..............................................................................................

3) WHAT IS YOUR NAME? ..............................................................................................

12. பின்வரும் வாக்கியத்தின் கருத்தை ஆங்கிலத்திற்கு மாற்றி ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.
தயவு செய்து அமைதியாக இருங்கள். ..............................................................................................

13. ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலப் பெயரை ஆங்கில எழுத்துக்களிலே எழுதுக.

1) 
2) 
3) 
4) 

.................................... ........................................ .................................... ..............................................

14. பின்வரும் வாக்கியங்கள் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தைத் தமிழ் எழுத்துக்களில் எழுதுக.

1) எமது நாடு இலங்கை ..............................................................................................

2) நாம் தமிழ் நன்றாகப் பேசுவோம். ..............................................................................................

15. பின்வரும் வாக்கியங்களில் கருத்தைத் தமிழில் எழுதுக.

1) கடே கீயட்டத வான்னே ..............................................................................................

2) ஒயா மட்ட கியல தெனவதா? ..............................................................................................

16. பின்வரும் பழமொழிகளில் உள்ள வெற்றிடங்களை நிரப்புக.

1) விளையும் பயிரை .............................................................................. தெரியும்.

2) இரக்கப் போனாலும் .............................................................................. போ.

3) இளமையிற் கல்வி .............................................................................. எழுத்து.

17. சரியாக எழுத்துக் கூட்டப்பட்டுள்ள சொல்லின் கீழ்க் கோடிடுக.

1) 1. வல்லரசு 2. வல்லறசு 3. வள்லரசு

2) 1. நாடேங்கும் 2. நாடெங்கும் 3. நாடொங்கும்

3) 1. வறியவர்கள் 2. வரியவர்கள் 3. வறியவர்கல்

**18 தொடக்கம் 30 வரையுள்ள வினாக்களுக்குரிய விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்த தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

18. உணவுப் பொருளொன்றை வாங்கும் போது கண்டிப்பாக அவதானிக்க வேண்டியது யாது?

1) பொருளின் விலை

2) பொருளின் காலாவதியாகும் காலம்

3) பொருளின் அளவு

19. இனப்பரம்பல் அடைவதற்காக கொழுக்கி கொண்ட வித்துக்கள் எவை?

1) எருக்கலை, குருவிச்சை

2) புலிநகம், நாயுருவி

3) ஆடையொட்டி, காசித்தும்பை

20. தண்ணீரில் மிதந்து சென்று இனப்பரம்பல் அடையாத வித்து யாது?

1) தேங்காய் 2) மாங்காய் 3) பாக்கு

21. முலையூட்டி விலங்கு அல்லாதது எது?

1) பல்லி 2) பூனை 3) நாய்

22. மண்ணெண்ணெய்க்குப்பி விளக்கு சரிந்து வீழ்ந்து தீப்பற்றினால் அதை அணைப்பதற்கு உகந்ததல்லாதது எது?
1) நீர் 2) ஈரச்சாக்கு 3) மணல்

23. தோகை விரித்து அழகாக ஆடும் மயில் இனம் எது?
1) ஆண்மயில் 2) பெண்மயில் 3) ஆணும், பெண்ணும்

24. நீந்துவதன் மூலம் இடம்பெயரக் கூடிய பறவை எது?
1) கொக்கு 2) வாத்து 3) நீர்க்காகம்

25. உரோமங்களால் மூடப்படாத பிராணி எது?
1) முதலை 2) முயல் 3) செம்மறிஆடு

26. மரங்களில் கூடு கட்டி வாழாதது எது?
1) அணில் 2) காகம் 3) குயில்

27. இலங்கையில் மிருகக்காட்சிச்சாலை அமைந்துள்ள இடம் எது?
1) கண்டி 2) யால 3) தெகிவளை

28. யானைகள் சரணாலயம் அமைந்துள்ள இடம் எது?
1) யால 2) பின்னவல 3) தெகிவளை

29. தோலினால் சுவாசம் நடாத்தும் பிராணி எது?
1) மீன் 2) மண்புழு 3) பாம்பு

30. கண்களை மூடுவதற்கு இமை இல்லாத பிராணி எது?
1) மீன் 2) தீக்கோழி 3) கிவி

**தரப்பட்டுள்ள வெற்றிடத்தில் விடையை எழுதுக.**

31. எண்கோலங்களில் அடுத்த வரும் இரு எண்களையும் முறையே எழுதுக.
1) 3030, 3020, 3010, ................. , ............................
2) 1234, 2345, 3456, ................. , ...........................
3) 1909, 1906, 1903, ................ , ............................

32. பின்வரும் பின்னங்களுக்கு பொருத்தமான இரண்டு சமவலுப் பின்னங்களை எழுதுக.
1) $\frac{1}{3}$ = .................. , ................
2) $\frac{1}{2}$ = .................. , ................
3) $\frac{1}{4}$ = .................. , ...............

33. பின்வரும் வடிவங்களில் அதற்கெதிரே தரப்பட்டுள்ள பின்னப்பகுதிகளை நிழற்றுக. அவற்றில் நிழற்றப்படாமல் எஞ்சியுள்ள பகுதி பின்னத்தில் எழதுக.

1) $\frac{2}{6}$ =  ................

2) $\frac{5}{8}$ =  ................

3) $\frac{1}{4}$ =  ................

34. ஐந்த நண்பர்கள் ஆளுக்கு ரூபா 150 வீதம் சேர்த்த பணத்தில் ரூபா 325 இற்குப் பழங்களும் ரூபா 150 இற்குப் பானங்களும் வாங்கி மீதிப் பணத்தை தம்மிடையே சமமாகப் பங்கிட்டார்கள்.
   1) பழங்களும் பானங்களும் வாங்கச் செலவிட்ட பணம் யாது? ரூபா ..........................................
   2) மீதிப் பணத்தில் மூவருக்கு கிடைத்த பணம் எவ்வளவு? ரூபா ..........................................

35. அமலன் பரீட்சை ஒன்று செய்வதற்காக காலை 6.00 மணிக்கு கொழும்பிலிருந்து புறப்பட்டு கண்டி சென்று திரும்பி வந்தான். கொழும்பிலிருந்து கண்டி செல்ல மூன்று மணித்தியாலங்களும் திரும்பி வர நான்கு மணித்தியாலங்களும், பரீட்சைக்காக ஐந்து மணித்தியாலங்களும் செலவாகின.
   1) அமலன் கண்டியிலிருந்து புறப்பட்ட நேரத்தை 24 மணித்தியாலக் கடிகாரத்திற்கேற்ப எழுதுக.
   ..............................................................
   2) அமலன் கொழும்பிற்குத் திரும்பி வந்த நேரத்தை சாதாரண நேரத்தில் எழுதுக.
   ..............................................................

36. அட்டவணையிலுள்ள வெற்றிடங்களைப் பூர்த்தி செய்க.

| திண்மம் | முகங்களின் எண்ணிக்கை | உச்சிகளின் எண்ணிக்கை | விளிம்புகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1)  | | | |
| 2)  | | | |
| 3)  | | | |

37. 1) வரைபிற்கேற்ப அட்டவணையிலுள்ள வெற்றிடங்களை பூர்த்தி செய்க.
   2) அட்டவணையிலுள்ள தகவல்களுக்கேற்ப வரைபைப் பூர்த்தி செய்க.




| தினங்கள் | செலவான பணம் |
|---|---|
| திங்கள் | 300 |
| செவ்வாய் | ............ |
| புதன் | 400 |
| வியாழன் | ............ |

38. உருவில் உள்ள தகவல்களுக்கேற்ப அட்டவணையில் உள்ள வெற்றிடங்களைப் பூர்த்தி செய்க.







39. வெற்றிடங்களுக்குப் பொருத்தமான விடையை அடைப்புக் குறிகளினுள்ளேயிருந்து தெரிந்தெடுத்து அதன் கீழ்க் கீறிடுக.
   1) நாய் கடித்தாலும் ...................... ( கடிக்கும் / கடிக்கலாம் )
   2) அம்மா ஒவ்வொரு ................. ( தோசைகளாக / தோசையாக ) சுட்டாள்.
   3) மைதானத்தில் சனக் கூட்டம் ..................... ( அலைமோதியது / அலைமோதியன )
   4) மைதானத்தில் பார்வையாளர்கள் ................. ( நிறைந்திருந்தனர் / நிறைந்திருந்தது )
   5) என்னால் ............. ( பேசிய / பேசப்பட்ட ) கருத்துக்களை சபையோர் வரவேற்றனர்.
   6) நாங்கள் ............... ( எழுதிய / எழுதப்பட்ட ) கவிதைகளை வாசித்தார்கள்.
   7) எருது முன்னே செல்ல பசு அதனைப் பின் ............ ( தொடர்ந்தது / தொடர்ந்தன )

40. 'கிளி' என்னும் தலைப்பில் நான்கு வரிகள் கொண்ட சிறு கவிதை ஒன்றை எழுதுக.
.......................................................................................................................................
.......................................................................................................................................
.......................................................................................................................................
.......................................................................................................................................